செ.வெ.எண்:-220 நாள்:-09.03.2010

# பத்திரிக்கை செய்திக் குறிப்பு

நகர் – ஊரமைப்பு துறையின் மாண்புமிகு. அமைச்சர் **பரிதி இளம்வழுதி** அவர்கள் இன்று (09.03.2010) முற்பகல் சென்னையில் உள்ள நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் திரு. பங்கஜ்குமார் பன்சல், I.A.S. அவர்கள் முன்னிலையில் அலுவலகப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், தமிழ்நாடு ரியல் எஸ்டேட் / கட்டிட அபிவிருத்தியாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் நேரில் கலந்து ஆலோசித்து அவர்களின் குறைபாடுகளை நேரில் கேட்டறிந்தார். இதுபற்றி கூறுகையில் அரசும் / அபிவிருத்தியாளர்களும் இணைந்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இணைந்து செயல்படவேண்டும். கட்டுமான பொறியாளர்களுக்கு விரைவில் ஒப்புதல் கிடைக்கும் வகையில் தற்போதைய இயக்குநர் அவர்கள் விரைந்து செயல்படுவதை பாராட்டினார்கள். அதேசமயம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளில் உள்ள சலுகைகளை கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களுக்கு விரிவுபடுத்துவதற்கான அரசு உத்திரவுகள் விரைவில் பிறப்பிக்கப்பட உள்ளது. இதனால் கட்டுமான அபிவிருத்தியாளர்கள் மற்றும் பொதுமக்கள் விரைவில் பயன் அடைவார்கள்.

நகர் ஊரமைப்புத் துறையால் தயாரித்து ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள், விரிவு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் முழுமைத் திட்டங்கள் ஆகியவற்றின் வரைபடங்கள் அதன் தற்போதைய நிலை ஆகியவற்றினை அவ்வப்போது அறிந்திட இணையதள வசதி தொடங்கப்பட்டது. முதற் கட்டமாக கடந்த நான்கு ஆண்டில் நகர் ஊரமைப்பு இயக்குநரால் ஒப்புதலளிக்கப்பட்ட அனைத்து மனைப்பிரிவு வரைபடங்கள், துறையின் செயல்பாடுகள் ஆகியவை குறித்து இணைய தளத்தினை கீழ்க்காண் முகவரியில் மாண்புமிகு. நகர் ஊரமைப்பு துறை அமைச்சர் அவர்கள் நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்கள் முன்னிலையில் துவங்கி வைத்தார்கள்.

முகவரி : www.tn.gov.in/dtcp

பொதுமக்கள் மேற்படி இணையதளத்தின் மூலமாக துறையின் முக்கிய செயல்பாடுகள், திட்டங்களில் உள்ள நிலப்பயன் மற்றும் விண்ணப்பங்களின் நிலை குறித்து அறிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் நகர் ஊரமைப்புத் துறையின் இணையதள முகவரி இன்று 09.03.2010ல் துவக்கி வைக்கப்பட்டது**

வெளியீடு, இயக்குந...
செய்தி, மக்கள் தொடர்புத் து...
தலைமைச் செயலகம், சென்னை-...